1978 செப்டம்பர் 7] [திரு. செ. அரங்கநாயகம்]

துறை நிறுவனங்கள் ஏதோ தாங்களே தான் சம்பளத்தை வழங்கு பவர்கள் என்று நினைத்துக்கொண்டு ஆசிரியர்களை நிறுத்துவதும், வேலையிலிருந்து ஆசிரியர்களை நீக்குவதும்—இப்படி செய்யப் படுவதை எல்லாம் இந்த அரசால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதையும், நிச்சயமாக இதன் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதையும், ஆசிரியர்களுக்கு பணிப்பாதுகாப்பை தரும் என்பதையும், இப்படிப்பட்ட விஷயங்களில் நிச்சயமாக அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

இந்தப் பேரவையை மதியாது பேசுகின்ற அளவிற்கு எனக்கு எண்ணமில்லை என்பதைச் சொல்லிக்கொண்டு, இதனை மேலும் வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்னை பேரவை கூடி யிருக்கும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அரசின் கொள்கை பற்றிய ஓர் அறிவிப்பைப் பேரவையில் செய்யாது, வெளியில் தெரிவித்தார் என்பது குறித்து எழுப்பப்பட்டுள்ளது. கொள்கை பற்றிய அறிவிப்புக்களை, பேரவை கூடியிருக்கும் சமயம் பேரவையில்தான் செய்ய வேண்டும் என்பது மரபு. இம்மரபை மீறிய செயல் அவை உரிமை மீறிய செயல் ஆகாது. இதில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்று இப்பேரவையில் பல தீர்ப்புகள் உள்ளன.

எனவே, இப்பிரச்சனையில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) சிவகங்கை மன்னர் கல்லூரி மாணவர் குத்தப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. சுப்பிரமணியன் அவர்கள் இந்த அவையின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆனால், திரு. ஒ. சுப்பிரமணியன் அவர்கள் இருக்கையில் இல்லாமையால், கவன ஈர்ப்பு திரும்பப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கிறேன்.

திரு க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த விதியின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு பதிலைத் தெரிவித்தால், பொதுமக்களுக்கு அது உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: It can be placed.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மன்னர் கல்லூரிக்கு வெளியே 24-8-78 அன்று காலை 11 மணி அளவில் திரு. எம். கணேசன் என்னும் இக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். இதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களிடையே உணர்ச்சிமிகு கொந்தளிப்பு நிலை காணப்பட்டதால், அக் கல்லூரி ஆசிரியர் குழு காலாண்டு விடுமுறையினை 25-8-78 அன்றிலிருந்து துவக்கி 31-8-78 வரை விடப்படலாம் என்று முடிவு செய்ததினல் மேற்படி தினங்களில் கல்லூரி மூடப்பட்டது. பெரும்பான்மையான விடுதியில் தங்கி இருக்கும் மாணவர்கள் விடுதியினை விட்டு 25-8-78 அன்றே தத்தம் ஊர்களுக்குச் சென்றனர்.

திரு. கணேசன் அபாயகரமான கட்டத்தைக் கடந்து உடல் நலம் தேறி வருகிறார், திரு. கணேசனைக் குத்தியது யார் என்று தெளிவாக இல்லை. மேலும், தன்னைக் குத்தியது யார் என்று திரு.கணேசன் சொல்ல இயலவில்லையென்பதால், காவல் துறையினர் வழக்கு ஏதும் பதிவு செய்யவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இக் கத்திக் குத்து சம்பவம் கல்லூரிக்கு வெளியே உள்ள சாலைப்புறத்தில் நடைப்பெற்றதால், இந் நிகழ்ச்சிக்கும் கல்லூரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும் 1-9-78 முதல் கல்லூரி மீண்டும் செயல்படுகிறது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) மாணவர்கள் படகு விபத்திற்குள்ளானது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது கவன ஈர்ப்பு தீர்மானம். திருவாளர்கள் கோ. இளங்கோவன், ரா. மார்க்கபந்து ப. சந்திரன், என். வரதராஜன், அ. சுவாமிதாஸ், பொ. விஜயராகவன், ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி, சின்னசேலம் மா. சுப்பிரமணியம், எம். ஏ. லத்தீப் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'பழைய வண்ணாரப்பேட்டை, பழனிச்சாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் எண்ணூர் அருகே 26-8-78 அன்று படகு விபத்துக்குள்ளாகி, 15 பேர் இறந்துபோனதும், அதனல் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வண்ணாரப்பேட்டை பி. ஏ. கே. பழனிச்சாமி நாடார் உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் சாரணர் பிரிவைச் சேர்ந்த 64 மாணவர்கள் திரு. சீனிவாசன் என்னும் தமிழாசிரியர் தலைமை